அகம்பாவம் மிக்க குதிரை

விவசாயி ஒருவனிடம் ஒரு குதிரையும், ஒரு கழுதையும் இருந்தன. குதிரை விவசாயியையும், கழுதை விவசாயின் பொதிகளையும் சுமப்பது வழக்கம்.

ஒருமுறை கழுதைக்கு பொதி சற்று அதிகமாகி விட்டது. அது குதிரையிடம், “நண்பா! இன்று ஒரு நாள் மட்டும் நீ என் சுமையில் கொஞ்சத்தை பகிர்ந்து கொள்ளேன்”, என்றது. அதற்கு குதிரை “பொதி சுமப்பது உன் வேலை. நான் எதற்கு பகிர்ந்து கொள்ள வேண்டும்,” என்று கூறி மறுத்து விட்டது.

சிறிது நேரத்தில் கழுதை சுமை தாங்காமல் சாய்ந்து விட்டது. இதைக் கண்ட விவசாயி கழுதையின் மேல் இரக்கம் கொண்டு பொதி அனைத்தையும் அகற்றி குதிரையின் மேல் ஏற்றிவிட்டான்.

இப்பொழுது குதிரை அதே பொதியை தூக்கிக் கொண்டு சென்றது. “அப்பொழுதே கழுதை சொல்வதை கேட்டிருந்தால் இதில் பாதியைத் தானே நாம் சுமந்திருப்போம்”, என்று நினைத்து வருந்தியவாறே சுமந்து சென்றது.

ஆகம்பாவம் வீழ்ச்சியைத் தரும்

ஆபத்தான சோதனை

நான்கு அறிஞர்கள் ஒரு நாள் காட்டு வழிப்பாதையில் நடந்து சென்று கொண்டிருந்தனர். வழியில் ஒரு கொத்து எலும்புத்துண்டுகள் கிடப்பதைக் கண்டு அவர்கள் ஆழந்த சிந்தனையில் மூழ்கினர்.

ஒருவர், “இவை ஒரு சிங்கத்தின் எலும்புகள். இதோ ஒரு நொடியில் இந்த எலும்புகளை ஒன்று கூட்டி அந்த சிங்கத்தின் எலும்புக் கூட்டை உருவாக்குக-ிறேன்”, என்று கூறி எலும்புக் கூட்டை உருவாக்கினார்.

இரண்டாமவர், “என்னுடைய அறிவாற்றலைக் கொண்டு நான் இந்த எலும்புக் கூட்டிற்கு சதையும் தோலும் உருவாக்கி விடுகிறேன்”, என்று கூறியவாறே சிங்கத்தின் சதையும் தோலையும் உருவாக்கி, எலும்புக் கூட்டிற்கு பொருத்தத் துவங்கினார்.

மூன்றாமவர், “என்னுடைய மந்திர சத்தியால் நான் இந்த சிங்கத்திற்கு உயிர் கொடுக்கப் போகிறேன்,” என்றார்.

நான்காமவர், “வேண்டாம், சிறிது சிந்தித்துப் பாருங்கள், இது ஒரு ஆபத்தான விளையாட்டு”, என்று எச்சரித்தார். அதை மூவரும் பொருட்படுத்தவே இல்லை. வேறு வழியில்லாமல் நான்காமவர் அங்கிருந்து ஓட்டம் பிடித்தார்.

அதைக் கண்டு சிரித்த மூன்றாமவர், “இவன் ஒரு முட்டாள், உயிர் கொடுத்த நம்மையா சிங்கம் கொல்லும்”? எனக் கூறி அதற்கு தன் சக்தியின் மூலம் உயிர் கொடுத்தார்.

உயிர் பெற்ற சிங்கம் செய்த முதல் காரியம் அந்த மூன்று பேரையும் கொன்றது தான்.

சிந்தனையில்லா அறிவும் ஆற்றலும் பயனற்றதே

ஆபத்தில் உதவி

மிகவும் அன்பு உள்ளம் கொண்ட முயல் ஒன்று இருந்தது. அது தன்னால் முடிந்தவரை மற்ற மிருகங்களுக்கு உதவிகள் செய்து வந்தது எல்லா மிருகங்களும் அந்த முயலைப் பாராட்டி வந்தன.

ஒரு முறை முயலே ஒரு சோதனையில் மாட்டிக் கொண்டது. சில வேட்டை நாய்கள் அதை மோப்பம் பிடித்தவிட்டன. முயல் ஓட அவை விரட்டிக் கொண்டு வந்தன. தன்னால் முடிந்த மட்டும் ஓடிய முயல் ஒரு முட்புதருக்குள் ஒளிந்து கொண்டது.

வேட்டை நாய்கள் விடுவதாய் இல்லை, புதரையே சுத்திச் சுத்தி வந்து கொண்டிருந்தன.

அந்த வழியே வந்த சில மிருகங்களிடம் முயல் உதவி கேட்டது. ஆனால் ஒவ்வொன்றும் ஒவ்வொரு காரணம் கூறி மறுத்து விட்டது.

“இவைகளுக்கு நான் எவ்வளவு உதவி செய்திருப்பேன். ஆனால் இன்று இவைகள் எனக்கு உதவாமல் செல்கின்றனவே”, என்று நொந்து போனது முயல்.

இதையெல்லாம் மேலே வட்டமடித்த படி பார்த்துக் கொண்டிருந்த கழுகு ஒன்று, முயலை தூக்கி கொண்டு போய் பத்திரமான இடத்தில் விட்டுச் சென்றது. முயல், “நாம் செய்த நன்மையால் நாம் தப்பி விட்டோம்”, என்று நினைத்து கழுகுக்கு நன்றி கூறியது.

நாம் பிறருக்கு செய்யும் நன்மை தக்க சமயத்தில் நம்மை காக்கும்

ஏழையின் செல்வம்

ராமசந்திரனும், பிரேமசந்திரனும் பக்கத்து வீட்டுக்காரர்கள். ராமசந்திரனோ ஏழை. அடுத்த வேளை சாப்பாட்டிற்கே வழியில்லாதவன். பிரேமசந்திரன் பணக்காரன், சுகபோகத்தில் வாழ்பவன்.

எப்போழுது பார்த்தாலும் இருவரும் ஒருவரை ஒருவர் பொறாமையுடன் பார்த்துக் கொள்வார்கள். ராமசந்திரன் பிரேமசந்திரனின் செல்வத்தை எண்ணி பொறாமை கொள்வான். பிரேமசந்திரன் ராமசந்திரனின் நிம்மதியை எண்ணி பொறாமை கொள்வான்.

ஒரு நாள் இருவரும் நேரிடையாகவே பேசிக் கொண்டார்கள். ராமசந்திரன் "பிரேமசந்திரா! உனக்கென்னப்பா, நீயோ பணக்காரன். ஏழு தலைமுறைக்கு சொத்து இருக்கிறது." என்று அங்காலாய்த்துக் கொண்டான். பிரெமசந்திரன் "ராமசந்திரா! என்னிடம் சொத்து இருந்து என்ன செய்ய நிம்மதி இல்லையே," என்றான்.

அதற்கு ராமசந்திரன், "ஆமாம் பெரிய நிம்மதி! என்னிடம் மட்டும் பணம் இருந்தால் நான் இன்னும் எவ்வளவு சந்தோசமாக இருப்பேன் தெரியுமா?" என்றான்.

உடனே பிரேமசந்திரன் தன்னிடம் இருந்த பணப் பெட்டியை எடுத்து ராமசந்திரனிடம் கொடுத்து இதை வைத்துக்கொள், என்றான்.

ராமசந்திரனுக்கு ஒரே சந்தோசம். இரவு வந்ததும் ராமசந்திரனுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. அப்படியும், இப்படியும் அலைந்தான். பணத்தை எங்கே வைப்பது என்றே தெரியவில்லை; இரவு முழுவதும் தூங்கவே இல்லை; கடைசியில் விடிந்தே விட்டது. பணத்தை கொண்டு போய் பிரேமசந்திரனிடமே திரும்ப கொடுத்த பின்தான் நிம்மதி அடைந்தான்.

பணத்தால் எல்லாவற்றையும் வாங்க முடியாது